26th July 1957] [Sri K. Anbazhagan]

உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுவதாகும். அந்தக் கணக்குத் தணிக்கை குழுவானது ஏதாவது தவறுகள் இருந்தால் அதைக் கண்டு பிடிப்பதற்காக அமைந்த ஒரு பகுதியே தவிர செய்ய வேண்டியதை ஒழுங்காக செய்து விட்டார்கள் என்பதற்காக பாராட்ட வேண்டிய ஒரு முறையிலோ அல்லது, லாலி பாடவேண்டிய ஒரு முறையிலோ அமைந்தது அல்ல. அந்தத் துறையிலே கணக்கில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டப்பட்டபடி நாங்கள் எடுத்து வைத்துப் பேசுகிறபோது ''அதை வைத்துக்கொண்டு பேசுகிறீர்களே அது முறையா? பாராட்ட வேண்டிய பகுதிகளை பாராட்டா மல் இருக்கிறபோது குற்றங்குறைகள் உள்ள பகுதிகளைப்பற்றியே பேச லாமா?'' என்ற கருத்தைக் கனம் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறார். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்—ஆடிட் ரிப்போர்ட் என்பதே குற்றம் சாட்டுவதற்காக, தவறுகள் நடந் திருந்தால் அதை எடுத்துக் காட்டுவதற்காக அன்றி வேறு எதற்காக அமைந்தது என்று? ஆனால் ஆடிட் ரிப்போர்ட்டில் கண்டுள்ள தவறுகளை மட்டும் அல்ல சட்ட சபை உறுப்பினர்கள் என்ற முறையில் எடுத்துச் சொல்வது. அந்தத் தணிக்கை விவரம் புள்ளிக் கணக்கைத் தணிக்கை செய்ததே தவிர கணக்கில் வராமல் நடைபெறுகிற தவறுகளுக்கு அந்தத் தணிக்கை போதுமானது அல்ல. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கணக்கை ஒழுங்காகத்தான் வைத்திருப்பார்கள். இதற்கு இவ்வளவு ரூபாய் கொடுத் தோம், அதற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தோம் என்று கொடுத்ததற்குக் கணக்கு எழுதி வைத்திருப்பார்கள். ஆனால் கையூட்டு லஞ்சம் வாங்கியதற் கான கணக்கைத் தணிக்கை அதிகாரியிடம் ஒப்படைப்பதில்லை. சர்க்கார் பணத்தைச் செலவு செய்ததற்கான கணக்கு மட்டுமே வருகிறது. சுய லாபம் தேடிய கணக்கு வருவதில்லை. அவற்றை யெல்லாம் எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்பு எதிர் கட்சிக்கு இருக்கிறது என்றாலும் அவற்றை நாங்கள் திட்டமாக சுட்டிக்காட்ட முடிவதில்லை. இன்னார் இன்னா ருக்கு இவ்வளவு கொடுத்தார்கள், இன்னார் இவ்வளவு வாங்கினார்கள் என்று சுட்டிக்காட்டி, இவ்வளவு ரூபாய் வரவு செலவு நடைபெற்றது என்று எம்மால் எடுத்துக் காட்ட முடியவில்லை. ஆனால் நாட்டில் நடை பெறும் எல்லா தவறுகளும் நிர்வாகத்திலேயுள்ள எல்லா கோளாறு களும் தணிக்கை அதிகாரியால் கண்டு பிடிக்கப்பட்டு இந்த கணக்குத் தணிக்கை விவரத்திலும் அடங்கி விடுவதில்லை. இதில் அடங்கியுள்ள தவறுகள்தான் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிகிறதே தவிர இதில் கண்டிராத தணிக்கை அதிகாரி கண்டுபிடிக்க முடியாத குற்றங் குறை களும் நாட்டிலே நிலவி வருகிறது. அவைகள் கனம் அமைச்சர் அவர் களுடைய காதுக்கு வந்து சேர்ந்திராது. அப்படி வந்து சேராத வரை நாட்டு மக்களுக்கு நல்ல நியாயம் கிடைக்காது. இந்த நிலைமையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் குறைகளைப்பற்றி பெரும்பாலும் பேச முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். அமைச்சர்கள் வேண்டுமானால் சட்ட மன்றத்திலே சொல்லலாம், நாட்டு மக்களுக்கு தாங்கள்தான் உண்மை யுடன் உழைக்கிறோம் என்று. ஆனால், எதிர்க்கட்சியினர் எடுத்துக் காட்டு கிற அளவுக்கு நாட்டு மக்களுடைய பரிதாப நிலைமையைப் புரிந்துக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள், ஆளும் கட்சியினர். ஆகையால், இந்த நிலைமையில் குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்டி நாங்கள் பேசுகிற போது, ஆடிட் ரிப்போர்ட்டிலே கண்டிராததும், நாட்டிலே நடமாடுவதுமான பல கருத்துக்களைச் சொல்லுகிறோம் என்பதை அமைச்சர்கள் எண்ணிப் பார்த்து, குற்றங்குறைகள் சொல்வது எதிர்க் கட்சியினுடைய வேலை, கடமை என்பதை கருத்தில் கொண்டு, நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைப் புரிந்து, அதற்கேற்ற முறையிலே இந்த மசோதாவை நிறைவேற்றி, நிர்வாக நடவடிக்கையிலே பயன்படுத்துமாறு நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: *கனம் சபாநாயகர் அவர்களே,* 2–01 p.m.
கனம் அன்பழகன் அவர்கள் நான் சொன்னதாகச் சொல்லிய கருத்தை நான் தெரிவிக்கவில்லை. குற்றங் குறைகளைத் தெரிவிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. நான் பேசின தமிழிலிருந்து ஒரு வேளை அவர் அப்படி நினைத்துக் கொண்டாரோ என்னவோ. நான் பேசின தமிழில் என்